## <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 15/2015</u>

நாள் 19.01.2026

DW1 – வெங்கடாசலம்

த/பெ – லேட். கருப்பண்ண கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of January 2026)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா 2–ம் அயிட்ட வீடானது எனது அப்பா வாழ்ந்த காலத்திலிருந்து இருக்கிறது. அதனால், தாவா 2–ம் அயிட்ட வீடானது எங்களது பரம்பரை சொத்து என்றால் சரியல்ல. தாவா 2–ம் அயிட்ட சொத்திற்கு எனது அப்பா பெயரில் உள்ள பட்டாவை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா அவருடைய நான்கு பேரன்களுக்கு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார். அந்த 4 பேரன்களில் இரண்டு பேர் எனது மகன்கள் ஆவார்கள். மேற்படி உயில் சாசனம் அமுலில் உள்ளதாக சொல்லப்படும் நிலையில் எனது பெயருக்கு பி.வா.சா.ஆ.9 தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் என்ன என்றால் எனது அப்பா எனது பேரில் இருந்த பிரியத்தின் பேரில் தான் எழுதியுள்ளார், மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது. அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் அது குறித்த வாசகங்கள் உள்ளதா? என்றால் அது எனக்கு தெரியாது. உடல்நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்த எனது அப்பாவை தூக்கிச் சென்று சுயநினைவே இல்லாத எனது அப்பாவிடம் பி.வா.சா.ஆ–9 செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது அப்பாவின் வலது கை ரேகையை ஒட்டி மோசடியாக நான் ஆவணத்தை

ஏற்படுத்திக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு உடந்தையாக சகலை ராஜேந்திரனும் உடந்தையாக இருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 06.04.2009–ம் தேதியிட்ட பாகப்பத்திரம், 30.04.2009–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம், 15.05.2009–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம், 03.07.2012–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆகிய பத்திரங்களில் எனது சகோதரி ரத்தினம் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் ஏற்பட்ட விபரங்கள் எதுவும் எனது சகோதரி ரத்தினத்திற்கு தெரியாது என்றால் அது என்னால் சொல்ல முடியாது. நான் எதுவும் அவருக்கு சொல்லவில்லை.

2. எனது சகோதரி பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னிட்டு தான் பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.5, பி.வா.சா.ஆ.11, பி.வா.சா.ஆ.12, பி.வா.சா.ஆ.13, பி.வா.சா.ஆ.14, பி.வா.சா.ஆ.20, பி.வா.சா.ஆ.21, பி.வா.சா.ஆ.22, பி.வா.சா.ஆ.23, பி.வா.சா.ஆ.24 ஆகிய ஆவணங்களை ஏற்படுத்தி கொண்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.16 ஆனது 10.09.1979–ம் தேதிக்குரியது என்றால் சரிதான். அதனால், எனது அப்பா 1979–ம் ஆண்டில் பவர் லூம் நடத்தி வந்ததாக நான் சொல்லும் நிலையில் 1961–ம் ஆண்டில் எனது அப்பா சொத்து வாங்க முடியுமா? என்றால் முடியாது. எனது அப்பா 1959–ம் ஆண்டில் விவசாய கடன் வாங்கியதாக சொல்லி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதனால், எனது அப்பா விவசாயம் தான் செய்து வந்தார் என்றால் சரிதான், பருத்தி வியாபாரமும் கூடுதலாக செய்து வந்தார். நான் 1961–ம் ஆண்டில்

பிறந்துள்ள நிலையில் எனது அப்பா பருத்தி வியாபாரம் செய்து வந்தார் என்பதை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா கருப்பண்ண கவுண்டருக்கு  அவர் இறந்த தேதியான 17.07.2009-ம் தேதியில் அவர் பெயரில் சொத்து ஏதேனும் இருந்ததா? என்றால் 1.10 ஏக்கர் சொத்து இருந்தது.

3. மேற்படி வீதம் எனது அப்பா இறக்கும் போது அவருக்கு 1.10 ஏக்கர் சொத்து இருந்தது என்பதை எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாதியின் ஆட்சேபணையை மீறி நான் தாவா சொத்தில் கட்டிடம் கட்டி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல, எனது இடத்தில் தான் கட்டிடம் கட்டினேன். அந்த கட்டிடத்திற்கு கதவு எண் வழங்க உத்தரவிடக்கோரி நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை வழக்கு எண்.18394/2023 தாக்கல் செய்து உத்தரவு பெற்றேன் என்றால் சரிதான். அந்த **உத்தரவின் கணினி நகல் வா.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதேபோல், எனது சகோதரி வாதியும் அந்த கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்கக்கூடாது என்று ஒரு நீதிப்பேராணை வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான், அந்த வழக்கு தள்ளுபடி ஆகி விட்டது. தாவா சொத்து முழுவதும் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து பொது சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் ஏற்படுத்திக்கொண்டு தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் செல்லாது என்றால் சரியல்ல. கடந்த 30.09.2004-ம் தேதியிட்ட உயில் சாசனத்தை எனது அப்பா எழுதி கொடுக்கவே இல்லை என்றும், அது போலியானது என்பதால் அந்த உயில் சாசனம் செல்லாது என்றால்

சரியல்ல. அதனால், தாவா சொத்தில் வாதிக்கு பொதுவில் 1/3 பங்கு பாக பாத்திய உரிமை உண்டு என்றால் சரியல்ல.

4. தாவா 3–ம் அயிட்ட சொத்து எனது தகப்பனாருக்கு சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டது. அதனால் தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் எங்களுக்கு பூர்வீக சொத்துக்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 செட்டில்மெண்ட் ஆவணம் எனது தூண்டுதலின் பேரில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால் அது செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு இதர கூட்டு பங்குதாரர்கள் யார் யார் என்ற விபரங்களை கேட்டு வாதி தரப்பில் ஒரு குறிப்பாணை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் பேரில் எங்களது தரப்பில் கொடுக்கப்பட்ட விபரத்தின் பேரில் அந்த நபர்களை இந்த வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். அதனால் வாதியும், வாதியின் கணவரும் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வாதிக்கு திருமணத்தின் போது எவ்வளவு சீர் செய்யப்பட்டது என்றும், யார் செய்தார்கள் என்றும் அது குறித்த ஆவணங்கள் எதுவும் எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த நிலையில், வாதியின் திருமணத்தின் போது நான் மைனராக இருந்து வந்த நிலையில் வாதிக்கு நான் சீர் செய்ததாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல, திருமணத்திற்கு பின்னிட்டு அவருக்கு நான் சீர் செய்து வந்தேன். நான் வாதிக்கு சீர் செய்து வந்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2–ம் பிரதிவாதியின் தூண்டுதலின் பேரில் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக

நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR Digitally signed by C SENTHIL KUMAR Date: 2026.01.19 17:56:03 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**